ஸ்ரீ: Regd No. M 4456

ஸ்ரீ தேசிக ஸ்ரீஸூக்தி

ஸம்ரக்ஷிணீ

ஸம்புடம் 6] [ஸஞ் 12



ஸுபானு மார்கழி

1943 டிசம்பர்

போஷகர் வருஷ சந்தா ரூ. 5-0-0

ஆஜீவித சந்தாதாரர் ரூ. 50-0-0

வருஷச் [மாதப் பத்திரிகை] சந்தா 2-0-0

ஸம்பாதகர்—பரவஸ்து ஸ்ரீநிவாஸாசாரியர்

S. No. .... *சந்தா நெ* ....

Sri.

SRI SAMRAKSHINI OFFICE, THILLAISTANAM. B. O. (VIA)TIRUVADI

ஸ்ரீ:

விஷய அட்டவணை.

1.	பெருமாள் திருமஞ்சனக்கட்டியம்.	399—400
2.	குழலூதற்சிறப்பு	401—402
3.	முகுந்தமாலை.	403—405
4.	யதுநாதன் (முன்தொடர்ச்சி.)	406—410
5.	யாதவாப்யுதயம்	279—282
6.	ஸ்ரீநிவாஸவள்ளல் ஸம்ரக்ஷிணீ அனுபந்தம்	1—8
7.	லக்ஷார்ச்சனைகள்	ராப்பர்-2
8.	புஸ்தகவிமர்சம்	ராப்பர்-3
9.	ஸ்ரீஸங்கல்பஸூர்யோதயம்	ராப்பர்-4

ஸ்ரீ:

லக்ஷார்ச்சனைகள்.

1 திருக்கலியாணபுரத்தில் கோவில்கொண்டு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ ஸ்ரீநிவாஸப் பெருமாளுக்கு ஸ்வபாநு௵ மார்கழிமீ 8௳ வியாழக்கிழமை லக்ஷார்ச்சனை ஆரம்பிக்கப்பட்டு தைமீ 13௳ புதன்கிழமை திருவோண நன்னாளில் பூர்த்திபெறுகிறது. அன்றே திருக்கல்யாண உத்ஸவாரம்பம்.

நாதமுனி. V. ரெங்கனாதன்.

2 தில்லைஸ்தானத்தில் கோவில் கொண்டு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீநிவாஸப்பெருமாளுக்கு சென்ற கார்த்திகைமீ 17௳ லக்ஷார்ச்சனை ஆரம்பித்து நாளது மார்கழிமீ 14௳ முடிவுபெறுகின்றது. பெரியதிருமஞ்சனமும் அன்று இரவு கருடோத்ஸவமும் நடைபெறும். ஷையூர் ஸ்ரீமான் B. ராமஸ்வாமி அய்யங்கார் அவர்களின் முயற்சி கொண்டாடத்தக்கது.

(ஸம்-கர்)

ஸ்ரீ:

"ஸ்ரீ தேசிக ஸ்ரீ ஸூக்தி ஸம்ரக்ஷிணீ"

(ஓர் மாதப் பத்திரிகை.)

ஜீவநம் ஜகதாம் ஜீயாத் கிமந்யைர்வ்யவஹாரதஃ |
ஸ்வதந்த்ரம் ஸர்வதந்த்ரேஷு வேதாந்தார்யவாங்மயம் மஹஃ ||

ஸம்புடம். 6	ஸ்வபாநு — மார்கழி	ஸஞ்சிகை 12

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நமஃ |

பெருமாள் திருமஞ்சன கட்டியம்.

க்ஷ்வம் தேzஹம் தே க்ஷாந்தஸ்தத்ரவி க்ஷாந்த ஜலம் வேதமௌளி
ப்ராணாத் ஸத்வாநாதிஸிம்ஹாஸநாஸ்ஸவிஸ்வாத்ஸ்தோzவி
(தஹிர்)ஸாகேப்ராஸ ஸவ க்வகேப்ராஸஃ க்ஷஸ்ய மீதாதிஷு
மமவிதிதஃ கோzத்ர ஸாக்ஷீ ஸாயீஃ ஸ்யாத் ஹதே க்ஷதக்ஷ
வாதீ ஸ ஜதி ந்ரக்ஷமேஹ ம்ருக்ருமேப்ரஸ்யவக்ஷவ ||

ஸதாஜாதிவஜ்ர ஸம்வக்ஷிஜதகோமேஷாநிஸா
யாந்த்ரேஸீரவடீரஸாரவிமஸத் க்ஷவர்ணிரகாஸ்ரீரவத் |
ஸ்நாநீயம் தவநீயஸாஜநஸ்ரதம் தீயர்ம் க்ஷ்ரதாயர்ம் க்ஷாரா
ஸ்நாநேநாத்ர வ்ருஷாத்ரிநாய ஜநதாம் த்ராயஸ்வ தாவத்ர
யாத் ||

பொல்லாக்குரளுருவாய்ப் பொற்கையில் நீரேற்று அடியை முன்றயிரந்து அங்கே நின்று ஆழ்கடலும் மண்ணும் விண்ணும் முடிய வீரடியாய் முடித்துக்கொண்ட களையாரவோ, நாட்டில் பிறந்து படாதனபட்டு முனிசர்க்காய் நாட்டை நலியும் அரக்கரை நாடித்தடிந்த களையாரவோ. 'உத்தமவமர்த்தலவமைத்ததோரெழில்தனு உயர்த்த கணையால் அத்திரவரக்கன் முடிபத்துமொரு கொத்தென உதிர்த்த

களையாரவோ, ஒளியாவெண்ணையுண்டானென்று உரடோ லாச்சி ஒண்கயிற்றால் விளியாவார்க்கவார்ப்புண்டு விம்மி அழுதவழலாரவோ, விருந்தாவனத்திலின்று இட்டமான பசுக்களை இனிதுமரித்து நீரூட்டி விட்டுக்கொண்டு விளையாடிய வேர்வையாரவோ, நாட்டை நாட்டி தேனுகனும் களிரும்புள்ளுமுடன் மடிய வேட்டையாடிவந்த வேர்வையா ரவோ, மச்சொடு மாளிகை யேரி மாதர்கள் தம்மிடம் புக்கு க்கச்சொடுபட்டைக் கிழித்து காம்பு துகிலவை கீரி நிச்சலம் தீமைகள் செய்த விடாய் தீரவோ, பல்லாயிரம் பெருந்தேவி மார் எல்லாரும் சூழந்திருந்து குரவைகோர்த்த களையார வோ, புகலோங்கு பொன்மலை என்னதோர் புண்ணியகோ டியுடன் அயமேதவேதியின்மேல் எரிசுடர் நடுவில் அவத ரித்தவிழலாரவோ, பார்மன்னர் மங்கப்படைதொட்டு வஞ் சமர்த்து தேர்மன்னர்க்காயூர்ந்த களையாரவோ ஆவாரார் துணையென்று துளங்குநின்ற இளையாழ்வார் துயர்தீர்க்கக் கல்லும் ,முள்ளும் கடியவெங்கானிடைபொன்னடி நோவப் பெருந்தேவியாருடனே நள்ளிருளளவில் சென்ற களையார வோ, தம் திருமாதுடனே தான் தனியாசாயுரைகின்ற அந்த மிலாவருளாய் அத்தி(அஞ்சன)கிரி அருள் முகிலே, தேவர்க ளும் முனிவர்களும் சித்தர்களும் பத்தர்களும், பூவில் மழை பொழிந்து போற்றவே, வன்பெருவானகமுய்ய அமருய்ய மண்ணுய்ய, மண்ணுலகில் மனிசருய்யவே, துன்பமிகு துய ரகல அயர்வொன்றில்லாச்சுகம் வளர அகமகிழும் தொண் டர் வாழவே, பண்டைநாள் மறைமௌலிபடிந்திடும் தொண் டமண்டல (பாரத) வேதியர் வாழ்வே. தூயதென்மறை வல்லவர் வாழவே மஞ்சனமாடி அருள்வதே,

ஶ்ராணாயநே வரதகௌ ஶ்ரீணீவாஸிஃ
கோகிநீ ஸவதி ஸம்ஶக்ஷோஸாதெஃ ।
மாத்ராஸூவிவிஸுகுஸெநயுஸநாயகே தே
ரீயஸ்துயம் ஸுகடயத்வூஷிஷேகவாரி ॥

அருளப்பாடு ஸம்வயாரவக்ஷயார ஸஹஸ்யார ஸ்டூர் மங்களவாத்யம்.

———

ஸ்ரீ:

குழலூதல் சிறப்பு.

[ஸ்ரீவைகுண்டாசாரியர், தில்லைஸ்தானம்.]

திருவாய்ப்பாடியின் அருகாமையின் வனம்! கோவலர்களின் கூட்டம்! நடுவே நம்மிளங்கண்ணன். இயற்கையில் மன்மதனுக்கு செயற்கையழகு தான் என்னே! சிரஸில் அழகிய மயிற்பீலி! இடுப்பில் நன்குடுத்திய பீதகவாடை, மற்றும் பற்பல ஆபரணங்களும் நம் கண்ணனைச்சேர்ந்து நிறம் பெருகின்றன, நெற்றியில் அலையெறியும் சுருண்டு இருண்ட திருக்குழல் கற்றை. விண்ணவரும் மண்ணவரும் ஒருங்கு திரளும் கண் கொள்ளாக் காட்சி. பசுக்களை மேயவிட்டான். குழலூதலில் ஈடுபட்டான் நம் கோவலர் சிறுவன். தன் சிவந்த அதரங்களில் குழலை வைக்கிறான், புருவங்கள் நெறிக்தேறத் தொடங்கின குடவயிறு படுகிறது. வாய், கடைகூடுகிறது. சிறுவிரல்கள் குழலின் துவாரங்களைத்தடவிப் பரிமாறத் தொடங்கின, சிவந்த வாய் கொப்பளிக்கிறது. அதன் சக்திதான் என்ன? ஸர்வசக்தனிடம் தோன்றும் ஸர்வசக்தி யல்லவா? எங்கும் ஒரே மதுரத்வனி, ஆயர்பாடி முழுதும் கானமயம், ஆயர் சிறுமிகள் படும் பாடுசொல்லும் தரமன்று. வீடுகளில் தம் இடைகோவத் தயிர் கடையும் மங்கைகள் படும் பாட்டைப் பாரீர். குழலோசை செவிபடவே கொங்கைகள் குதூகலிக்கின்றன. உள்ளம் உருகத்தொடங்கிற்று, கடைவது தம்மையறியாமல் நின்றது, கையில்கயிறு கழுத்தில் மாலையாயிற்று. காவலைக்கடந்தும் ஓசைவரும் வழியைப் பின்பற்றிக் கண்ணனிடம் வந்து தலைகவிழ்ந்து நிற்கின்றனர், ஆய்ப்பாடியின் நாற்புறங்களிலிருந்தும் மக்களும் மாக்களும் கூடினர், ஆயர்சிறுமிகள் குழலோசைகேட்டு மெய்மறந்தனர். ஓடோடியும் வந்தனர், தம்கூந்தல் அவிழ்தலையும் மலர்கள் உதிர்தலையும் அறியவில்லை, உடைநெகிழத்தொடங்கிற்று, கை தம்பழக்கத்தால் அவ்வுடையைப்பற்றுகிறது, அப்படியே ஸ்தம்பித்தனர். தம் கண்களையும் காதுகளையும் பறிகொடுத்தனர், ஆறறிவு பெற்ற ஆயர்கள் இவ்வாறாக, மிருகங்களும், பறவைகளும், மரங்களும் படும்

பாட்டைப் பாரீர். பறவைகள் தம்கூடுகளைத் துறந்து கண்ணனைச் சூழ்ந்து படுகாடு கிடக்கின்றன. பசுக்கள் பல திசைகளினின்றும் பாய்ந்து வந்து குழலோசையை வாய்மடுத்து கால்பறப்பிட்டு செவியாட்டமாட்டாமல் நாற்புறமும் நிற்கின்றன. மான்கள் கூட்டம் கூட்டமாக மேய்கை மறந்து மேய்ந்த புல்லும் கடைவாய்வழிசோர கீதவலையில் சிக்குண்டு, சித்திரத்தில் எழுதியவை போன்று இருபுறமும் நிற்கின்றன. இம்மட்டோ! தாவரங்களின் தன்மைதான் என்ன? மரங்களினின்று தேன் தாரை தாரையாய் வார்க்கின்றது. மலர்கள் எங்கும் உதிர, கிளைகள் தாழ்ந்து கண்ணன் நின்ற பக்கமே நோக்கி நீள்கின்றன.

மண்ணவர் நிலை இவ்வாறாக, விண்ணவர் நிலை விவரிப்பதற்கு நிலமன்று, குழலோசை தேவருலகத்தளவும் கேட்டது, ஆகாசாவகாசமெல்லாம் தேவமயம். வெட்கத்தால் ஆடல், பாடலை மறந்த மேனகை, ஊர்வசி, திலோத்தமை, ரம்பை முதலானோர் ஓர் புறம். தத்தம் வீணையை மறந்த தும்புரு நாரதர் ஓர் புறம், ஒன்றையொன்று தொடாது, என்றும் பிரியாத கின்னர மிதுனங்கள் ஓர் புறம். நாணி, மயங்கி, நைந்து சோர்ந்து கீதக்கடலில் மூழ்கிய கந்தர்வர்கள் ஓர் புறம். ஆனந்தத்தில் ஆழங்கால்பட்டு, சிரக்கம்பத்தினால் தலையவிழ, மலருதிர, தேன் சொரிய, மனமுருக, முகம்வியர்க்க, சோர்ந்து நிற்கும் தெய்வமகளிர் மற்றோர் புறம்! தம்காதால் கண்ணனைப் பருகும் இந்திராதிதேவர்கள் ஒருபுறமுமாக ஆயர்பாடி வானவர்பாடியாயிற்று. இப்படிக் கண்ணனின் காதல் சுழலில் அகப்பட்டு நம் பெரியாழ்வாரின் கண்ணன் குழலூதற்சிறப்பு. நம் தேசிகமணியும், கோபாலவிம்சதியில் தம் காதல் தோன்ற யௌவநத்வயம் என்றும், அவருடையசேஷ்டைகளில் வேணுகானவ்ருத்தாந்தமே சிறப்புடையது என்பதை திவ்யவேணுரஸிகம் என்கிற பதங்களால், அதன் ஸௌஸ்ருதியிலும், தம் அந்திமதசையில் இவ்வேணுகானானுபவமே வேணும் என்னும் தம் அவாவை ஜயாராஹித ... ஸந்தித்ஸ்யாபேண என்றும் அருளிச்செய்கிறார்.

முகுந்த மாலை.

[குலசேகரரின் உபதேசம்]

(முன் தொடர்ச்சி.)

மேலும் ஸம்ஸாரமாகிற ஆழமான கடலில் முழுகித் தவிக்கும் ஜீவனுக்கு தைர்யம் ஊட்டுகிறார். "பயப் படாதே! செந்தாமரைக்கண்ணனிடம் பக்திசெய். அது உன்னைக் கட்டாயம் கரையேற்றிவிடும்" என்கிறார். (பவஜலதிகதானாம்). இதைக்கேட்டவுடன் எல்லாவித நம்பிக்கையை இழந்தவர்களுக்கும் மனதுக்குச் சமாதா னம் ஏற்பட்டு தைர்யமும் வந்துவிடுகிறது. இக்கருத் தையே நன்றாக விளக்கி தன்னுடைய திடமான நம்பிக் கையையும் மற்றொரு ச்லோகத்தால் வெளியிடுகிறார், (த்ருஷ்ணாதோயே). ஸம்ஸாரமாகிற கடலில் ஆசையே ஜலம். மன்மதனே காற்று. அவன் மோஹம் என்னும் அலையைக் கிளப்புகிறான். மனைவியே நீர்ச்சுழல்கள். பிள்ளைகளும் உடன்பிறந்தவர்களும் முதலைகள். இப்படிப் பட்ட பயங்கரமான பவக்கடலை விஷ்ணு பக்தி என்ற ஓடத்தினால்தான் தாண்டமுடியும் என்கிறார்.

இம்மாதிரி மூன்று ச்லோகங்களால் ஸம்ஸார வாழ்வின் பயங்கரத் தன்மையையும் ஸுகமின்மையையும் விளக்குகிறார். இது எல்லோருடைய மனதையும் கவர்ந்து நம்வழியில் திருப்பவல்லது என்பதில் என்ன ஸந்தேஹம். பிறகு ஸம்ஸாரம் ஒரு வியாதியாக மாறிவிடுகிறது. அதற்கு அருமருந்து ஒன்றைக் கொடுக்கிறார். க்ருஷ்ணன் என்கிற பெயரை உடைய அம்ருதம் அது. அம்ருதத் தின் சக்தியை அளவிடமுடியாது, அதைப் பருகிய வுடன் நிரந்தரமான குணத்தைக் கொடுக்கிறது. பவப் பிணி மறுபடியும் வரவே வராதாம். (ஹே லோகா: ச்ருணுத ப்ரஸூதிமரணவ்யாதேஶ்சிகித்ஸாம்।

3 பக்தர்கள்.

ஸம்ஸாரத்தைப்பற்றி விஸ்தாரமாகச் சொல்லிவிட்டு பகவத் பக்தர்கள் எப்படியிருக்கவேண்டும் என்பதைக் காட்டுகிறார். நமது இந்திரியங்கள் உலக ஸுகத்தை

அனுபவிப்பதற்கே என்று நாம் நினைத்துக்கொண்டிருக்கிறோம். அப்படியில்லையாம். நாக்கு எப்பொழுதும் பகவானின் பெயரைச் சொல்லிக்கொண்டே இருக்கவேணும். மனது ஸ்ரீதரனையே அடையவேண்டும். இரண்டு கைகளும் அர்ச்சனை செய்யவேண்டும். இரண்டு காதுகளும் பகவத் கதைகளையே கேட்கவேண்டும். இரண்டு கண்களும் நாராயணனின் திருமேனியைக் காணவேண்டும். இரண்டு கால்களும் கோவிலுக்குப்போகவேணும். மூக்கு முகுந்தனின் பாதத்தில் அர்ச்சித்த துளஸியை நுகரவேண்டும். தலையும் பகவானை வணங்கவேண்டும். நமது கரசரணாதி அவயவங்களெல்லாம் பகவத் கைங்கர்யத்திற்கே ஏற்பட்டது என்கிறார். ஜிஹ்வெ கீ.த்ய கெஶவம்

உண்மையான பக்தர்கள் ஸ்ரீமந் நாராயணனை நினைத்த உடனேயே கைகுவித்துவிடுவார்களாம். அவரைக் கண்டவுடன் தலைவணங்குவார்கள். உடம்புமுழுதும் ஆனந்தத்தினால் சிலிர்க்கும். கண்களிலிருந்து நீரும் பெருகும். தொண்டை அடைத்துக்கொண்டு பேச்சு தடைபட்டே வரும். தினம் பகவானுடைய திருவடித்தாமரைகளின் தியானமாகிற அம்ருதத்தை பானம்செய்வதால்தான் இப்படி வாழ்க்கை உண்டாகிறது (வஜெநாஜூ நா நதெந)

இம்மாதிரி நாம் எல்லோரும் இருக்கவேண்டுமென்று தான் உபதேசிக்கிறார். மனோவாக்காயங்களாகிற த்ரிகரணங்களாலும் பகவானையே பூஜிக்கவேண்டுமென்கிறார். இப்படியே ஸ்வானுபவத்தையும் சொல்லுகிறார். (நமோ நாராயணவாதவக்ஷம்). இப்படிப்பட்ட பகவானுடைய பக்தர்களுள் கடைசி பக்தருக்கும் தாஸனாக இருப்பது தனக்குப் பெரும் பாக்கியம் என்கிறார். (ஜநந: ஷஷிதபூ 8)

4 பகவந்நாமத்தின் மஹிமை.

ஆயுர்வேதத்திலும் மற்ற சாஸ்திரங்களிலும் நம்முடைய எல்லாப்பிணிகளையும் போக்கி அளவற்ற சுகத்தைக்கொடுக்கும் ஸாதனங்கள் மூன்று சொல்லப்பட்டிருக்கின்றன. அவைகள் மணி மந்த்ரம் ஔஷதம் என்பன.

இம்மூன்றும் ஸ்ரீ க்ருஷ்ணபரமாத்மாவேதான் என்கிறார். (ஸ்தாவாயஸ ஜஜுமாரஸ 8ணீ:) (ஸத்ருவெநெகஉதெ ஷ) (வ்யா ஸோஷ வூஸஉளஷயஷ) ஸ்ரீக்ருஷ்ணனை பக்தியுடன் தியானித்தால் மணிமந்த்ர ஔஷதங்களால் ஏற்படும் ஸித்தியும் கிடைக்கும் என்று தாத்பர்யம். ஸ்ரீமந்நாராயணனை நினைக்காமல் செய்யும் காரியமெல்லாம் வீண் தான் என்கிறார். அவருடைய திவ்ய நாமத்தை ஸ்மரிக்காமல் வேதம் ஓதுவது காட்டில் அழுதமாதிரிதான்; வேதத்தில் சொல்லப்பட்ட கருமங்களைச்செய்வதும் தேகத்தை வாட்டுவதற்கு மட்டும் உதவும்; கோயில்கட்டுதல் குளம் வெட்டுதல் முதலிய தருமகாரியங்களும் சாம்பலில் ஹோமம் செய்ததற்குச்சமானமாகும்; புண்யக்ஷேத்திரங்களில் ஸ்நானம் செய்வதும் யானையின் ஸ்நானத்திற்கு ஒப்பாகும் என்கிறார். (குஞ்ஜரஸ்நாநமிவ) பாபிகளும் கூட பகவந்நாமத்தைச்சொல்லி மோக்ஷத்தை அடைந்திருக்கிறார்களே. ஐயோ! முன்பு இதை நாம் மறந்துவிட்டோமே என்று வருத்தப்படுகிறார். அதாவது பகவத்சிந்தனையே இல்லாத நம்மை இனிமேலாவது பகவந்நாமத்சொல்லுங்கள் என்கிறார். (ஸ்ரீநாத ஜெருாவ)

ஸ்ரீராமா, ஸ்ரீ கிருஷ்ணா, கோவிந்தா, மாதவா என்று சொல்வதற்கு ஒரு கஷ்டமும் இல்லை. ஆனால் உலகவிஷயங்களில் ஈடுபட்டவர்கள் இதைக்கூட சொல்லமாட்டேன் என்கிறார்களே என்று வருத்தப்படுகிறார். பகவானுக்கு, பூஜை அர்ச்சனை ஒன்றும் செய்யமுடியாவிட்டாலும் மிகவும் ஸுலபமான ராமா கிருஷ்ணா என்கிற வார்த்தைகளையாவது சொல்லுங்கள், அதுவே நமக்கு அளவற்ற பயனைத்தரும் என்கிறார். (ஸ்ரீநாத நாராயண வாஸுதேவ கநஞ்ஜ வெகுண்ட 8கா ஹ க்ருஷ்ண) கடைசியாக பகவானுடைய திவ்யமங்களரூபத்தை வர்ணித்து முடிக்கிறார்.

க்ஷீரஸாமர தரஜுஶீகராஸார தாரகித வாரு 8ஷு த ஹெ
ஹொ மிஹொ மஸ்ய நீயஸாயிநெ 8ாயவா ய 8ய விதிஷெ நஃ

ஆதிசேஷன்மேல் பகவான் பள்ளிகொண்டிருக்கிறார். பிராட்டியும் பக்கத்தில் வீற்றிருக்கிறார். பாற்கடலின்

அலைகளின் திவலைகள் பகவானுடைய நெற்றியில் முத்து முத்தாக விழுந்து அலங்கரிக்கின்றன. இப்படிப்பட்ட மூர்த்தியை தான் தியானித்து வணங்குவதாகச் சொல்லுகிறார். இம்மாதிரியே நம்மையும் செய்யச்சொல்லுகிறார்.

யதுநாதன்.

S. T. ஸ்ரீநிவாஸாசாரியர், M. A. வித்வான் L. T.)

(முன் தொடர்ச்சி]

இரவு மணி பத்திருக்கலாம். ஸ்ரீ பேரருளாளனது திருமுன்பு யதுநாதன் நின்றார். ஸந்நிதியில் ஸேவார்த்திகள் இல்லை. துலங்கும் சுடர்முடியும் நீலச் சுடர் விடு நன்மேனியும், மலர்ந்த மதிவதனமும், வதனமெல்லாம் அவனது ஸர்வ ஜீவ தயாமயத்வத்தை விவரிக்கும் சிறு குழிகளும், உலகை வசீகரிக்கும் புன்னகையும், தனக்கு யாரும் நிகரில்லாத தத்வத்தை விளக்கும் மார்பு நெறிப்பும், சிற்றிடையும் செந்தாமரைக் கையும், சிலம்பார்ந்த சேவடியுங் கண்டு கண்டு புளகாங்கிதமாகி நாத் தழதழப்பாகி "என் தெய்வத்தரசே திருவாழ் செல்வமே! கச்சிக்கரசே! கற்றவர் தம்கற்பே! உள்ளுவார் உள்ளம் உறையுமொரு வடிவே"! என்று உரக்கக் கூவினார். அவரது பாலன்ன உடலெல்லாம் வியர்த்தது. கரங்களைச் செந்தாமரை மொக்குகளன்ன, தலைமேற் குவித்தார். "பார்த்தனுக்கெளிய பசுஞ்சுடரே! பண்டு பவளவாய் திறந்து பேசியதாகச் சொல்கின்றனரே! பேசாது உன் அழகில் நீயே மயங்கியதுபோல் நிற்கின்றாயே! உன் இருப்பே அடியவர்க்காயிற்றே, அடியவர்க்காக என்ன பாடு பட்டனை. முகிலாந் திருமேனியைச் செந்தீயில் தோற்றுவித்தனை. மூலமென்ன ஆனைக்காக ஸ்ரீ வைகுண்டத்தையே கைவிட்டு வியர்த்து ஓடிவந்தனை! எட்டாக் கனியே! குளிர் கற்பகமே! இமையோரிறையே! இந்திரைவாழ்வே! கச்சிக்களிறே! கடல்வாயமுதே! இச்சைப்பொருளே! ஈசர்தம் எழிலே! விச்சைப்பொருளே! மேவலர் கூற்றே! பச்சைக் கொண்டலே! பசுஞ்செழுந் தேனே!... அவர் உடல் குலுங்கியது. கண்ணீர் ஆறாய்ப் பெருகியது. ஐந்தாறு ஸேவார்த்திகள் வருவதைக் கண்ணுற்றுத் தான் வெளி வந்தார். மலையிலிருந்து

கீழே இறங்கியதும் ஓர் பெண்பிள்ளை தன்னை நமஸ்கரிப் பதைக் கண்டார். 'தெய்வத்தரசின் ஸந்நிதியில் ஓர் மாறுடன் பால் உன் நமஸ்ஸை விணாக்கும் நீ யார் ?' என்றார். பெண் மணியெழுந்தாள். வயது முப்பதிருக்கலாம். வாடியவுடல். கவலைகொண்ட முகம். சற்று குழிந்த கண்கள். ஒரு காலம் செழித்து நின்றிருக்கக்கூடிய முக வடிவு, இன்னுங்கட்டுக் கடங்காத கூந்தல். 'ஸ்வாமி ! யாவராலும் இகழப்பட்ட ஓர் அபாக்யவதி. சரித்ர ப்ரஷ்டை. இந்தக் கச்சியில் என்னையறி யாதார் இல்லை, மஹாபாபியும் ஸ்வைரசாரிணியுமான கோம ளவல்லி நான் தான் ...' அவள் கண்களில் நீர் பெருகியது. ,மஹானுகிய தேவரீரை நமஸ்கரித்தாவது ஜன்மஸாபல்யம் பெற நினைத்து தினம் தேவரீர் வரதனைத்தொழுது போருங் கால் தேவரீரை தூரத்தில் தண்டம் ஸ்மர்ப்பிவித்து அகல் வேன். இன்று தேவரீர் வரதனை அநுவித்த முறையைக் கண்டு கல்நெஞ்சினளான என் மனமும் கரைந்து ஆசை வெட்க மறியாது என்ற நியாயமாய் தேவரீரை நேரில் தண்டம் ஸமர்ப்பிவிக்கத் துணிந்தேன் ஸ்வாமி. அடியேனும் இதே காஞ்சீஸமீபம் வீரப்பாக்கம் க்ராமத்தில் உத்தமகுலத்தில் ஜனித்தேன். ...' பெண் அழ ஆரம்பித்தாள். யதுநாதன் 'தைர்யமாய்ச் சொல்லவேண்டியதிருந்தால் சொல்' என் ருர். பெண் ஆரம்பித்தாள். 'ஐயோ தங்கள் குரலில் எத் துணை ஆறுதல் ! எவ்வளவு தைர்யம்? என் கணவன் என்னை பந்துஜனங்கள் சொற்கேட்டுப் பண ஆசையால் ஏழை களான என் பேற்ருேரிடமே தள்ளிவிட்டார். என் பிதா கச் சிக்கு வந்தார். வைதிகத்தில் ஏதோ காலக்ஷேபம் நடந்தது. என் பாபபலனுய் எனது தனிமையின் காரணமாய் எனக்கு சரித்திரப்ரம்சம் நேர்ந்தது. உறவினர்கள் எங்கள் வீட்டையே அவமதித்தனர். வாழ்வு வெருந்தாழ்வாயிற்று. கச்சியில் பெரும்பரிபவமுற்று சாஸ்த்ரக்ஞரான தர்மாவதாரமான என் பிதா மனமுடைந்து இறந்தார். என் மாதாவும் அவரைப் பின்பற்றினுள். கச்சித் திருவீதியில் ஒரு வீடு தவிர வேறு எந்த உலக ஆதரவுமில்லாமல் அடியேன் ஆயி னேன். ஸ்வாமி மஹாபாபியான நான் ஸர்வலோகசரண்யனை மறந்து பாழும் உடல்வசப்பட்டுச் சிறிதுநாள் அன்யாயமாய்ப் போக்கிவிட்டேன். பின்னர் 'யோகக்ஷேமம் வஹாம்யஹம்'. என்ற ஸ்ரீபேரருளாளனது அமுதமொழிகளை தேவரீர் உப

ன்யாஸவாயிலாக அறிந்தேன். அவன் விட்ட வழி விடட்டு
மென்ற துணிவைக்கொண்டேன். தேவரீர் பொன்மொழிக
ளால் பாபமான அதி இன்பமயக்கமான என் வாழ்வை
மாற்றிக்கொண்டேன். அனந்தஸரஸ்ஸில் விழுந்து மடிய
நினைத்தேன். ஸர்வபர்த்தாவான வரதனிடம் பெரிய அப
சாரப்படுவதாகுமென்று அஞ்சினேன். 'உன்னை உலகம் இக
ழ்ந்தால் அது உன் பெரும் பாக்யம். ஸ்ரீவரதன் நீ துயரிலே
யே மனமுடைந்து தன்னை மறக்கிறாயா என்று பார்க்கும்
சோதனை! துக்கம் எத்தனை வரட்டும். அவனை விடாதீர்
கள், என்னப்பா எத்துணைத்துயரையும் இன்பம் போல் ஏற்
பேனென்று இருங்கள்' என்றீர்கள். வாளாலறுத்துச் சுடி
னும் மருத்துவன் பால் மாளாதகாதல் கொள்ளும் நோயாளி
போல் அந்தமருத்துவனாய் நின்ற மாமணிவண்ணனை நம்பி
னேன். உலகத்தார் வசையை இது தகும் என்று ஏற்றேன்.
உலகத்தையே பொருள் பண்ணாது அவ்வொண்சுடர்பால்
ஓர் காதல் எனது பாவ உள்ளத்திலும் கொழுந்துவிட. ஆரம்
பித்தது இதற்கு தேவரீரே மூலம். தேவரீரே என் தை
வம...''என அழுதாள். மந்தஹாஸத்துடன் பெருமூச்செறி
ந்து "ஸ்ரீ வரதனது திவ்ய லீலைகள் விசித்ரம். நீ சொல்வது
போன்ற மாறுதல் உன் உள்ளத்தில் மந்தமதியாயும் அசக்த
னுமான என் முயற்சியால் உண்டாயிருந்தால் இது ஆனந்த
கரமான செய்தி. ஆயிரந்திருவிழாக்களைவிட ஆயிரம் யாகங்
களைவிட ஒரு ஜீவன் ஸ்ரீகாந்தன்பக்கல் திரும்புவதைப்
பெரும்விழாவாக நித்யஸூரிகள் களித்துக்கொண்டாடுவார்
கள் வா" என்றார். பெண் கைகுவித்து "ஸ்வாமி நான்
நின்றுவருகிறேன், என்னுடன் நின்று பேசினால் தேவருக்குக்
கூட அவத்யம் வந்துவிடும், அத்தகைய அரும்பாவி அடி
யேன்'' என்றாள்.

கோமளத்தைக்காஞ்சிநகரம் முழுவதும் வெறுத்து ஒதுக்
கியது யதுநாதனுக்குத் தெரியும். தன் எதிரில் பேசிய
பெண் அவள்தானென்று கண்டுகொண்டார். அவர் என்ன
யோசித்தாரென்று ஊஹித்த கோமளம் "ஸ்வாமி! காஞ்சி
யின் வீதிகளிலும் சிறு சந்துகளிலும், குளக்கரையிலும்,
கோயிலிலும் யாவராலும் இகழப்பெற்ற கோமளம் நான்
தான். என்னைப்போன்ற பாவியர்க்கு இந்த தேவாதிராஜ
னது ஸந்நிதியில் வருதல்கூடப் பொருந்தாது. தேவச்ரேஷ்

டர்களும் பூஸுரர்களும் பணியும் அத்தேவர்பெருமானை உலகமிகழும். அடியேன் தொழுவது "கலிகோலாஹலமே!" எனும்பொழுது அவள் குரல் தழுதழுத்தது. "ஸ்வாமி! ஜன்ம ஜன்மாந்தரங்களிலேனும் இவ்வாத்மாவுக்கு இந்தப்பரிபவம் நீங்கி நல்ல பேறு உண்டாகுமா" என்று முத்துமுத் தாய் கண்ணீருதிர்த்தாள். அவளுடைய தாபத்தைக்கண்ட யதுநாதன் ஆச்சர்யமடைந்தார். இப்படிப்பட்ட பச்சாத் தாபமும் கண்ணீரும் ஆசாஸித்துப்பெறத்தக்கதாகுமே என நினைத்து ஆனந்தபரிதரானார். "அம்மா! புண்யசாலி களுக்கும் நித்யசுத்தருக்கும் ஆகவா புருஷோத்தமன் தன் வைகுண்டத்தையும் மறந்து தரையிற் காஞ்சி முதலிய தலங் களையடைந்தது? என்ன பேதமை! பாபமே அறியாத அவர் கள் நேரில் வைகுந்தம் செல்கிறார். எள்ளளவேனைய பாபியர் தன்னை நினைப்பதில்லையென்றறிந்தும் பேரருளால் அந்தப் பேரருளாளன் ஸ்ரீவைகுண்டம்போலவே இங்கும் நமக்குத் தன் எல்லையில் குணங்களைக்காட்டி நம் பாபங்களை மறந்து மன்னித்து நம்மைத் தன் வழிக்காட்படுத்தி ரக்ஷிப்பான்" என்றார். "கோமளம் ஸ்வாமி! பேயாய் பிசாசமாய் உழலு வேனென்று எண்ணியிருந்த எனக்கும் இந்த ஜன்மாவில் நசையை உண்டுபண்ணி நம்பிக்கை என்னும் ஒளியைத்தருகி றீர்களா என்ன" என்றாள். யதுநாதன் நீர்மல்கிய கண் ணினனாய்" நீ ஏன் இவ்வளவு துக்கப்படவேண்டும். நம் இருட்டைப்போக்கடித்து, பாபபலமாக வரும் நரகாந்தகார த்தையும் தடுப்பதற்காகவல்லவா தயாபரனான தேவர்பெரு மான் இந்தத் தலத்தில் தீபப்ரகாசனாய்த்திகழ்வது, பாபிக ளுக்கே வந்துதித்து அவரைக்கரையேற்ற தீக்ஷிதனாய் நிற்கும் அவனிடம் அன்பு செய்யும் பாக்யம் மாத்திரம் உண்டாய் விட்டால் என்ன கவலை? அவன் அருள்மாத்திரம் நம்மேல் வந்துவிடின் "பேயபிழையும் புகுதருவான் நின்றனவுந்தீயி னிற்றூசாகு' மல்லவா பாவிகள் பக்கம் அவன் அருள் பள்ளமடையாய் பாய்ந்தோடும்" என்றார். கோமளத்தின் கண்களில் ஆனந்த ஒளி வீசியது. "ஸ்வாமி! அந்தகாரத் தில் மூழ்கிய எனக்குமா இவ்வுலகில் வாழ்வுண்டு" என்னை யுமா ஸ்ரீவரதன் கடைக்கணிப்பான்" என யதுநாதன் குறுக் கிட்டு "அம்மா! அவன் ஸம்பந்தமில்லாத சேதனாசேதனமே இந்த விச்வத்தில் இல்லையே. உனக்குக் கரண களேபரங்

களைக்கொடுத்து உன் உடலில் உயிராய், உயிரின் உயிராய் வாழும் உத்தமன் உன்னை எதற்காகக் கைவிடவேண்டும். இந்தப் பரந்த உலகில் யாரைத்தானவன் கைவிடுவன். அவன் ஸர்வேச்வரன். உன்னைக்கைவிடில் அவனது ஸர்வேச்வரத்வமும் ஸர்வரக்ஷகத்வமும் என்ன ஆகுமம்மா! மனுஷ்யனது அறிவும் ஊகமும் அந்த தயாஸமுத்ரத்தை அளப்பதற்கு எந்த மூலையாகும்? ஐயய்யோ! எந்த மூலை! என்று சொல்லி மெதுவாக நடந்தார். கோமளம் வீடு சேர்ந்தாள். மத்தியானவேளைகளில் ஸ்ரீதேவாதிராஜனது கோயிலில் நாலுகால் மண்டபத்தில் உட்கார்ந்துகொண்டுப் பிரியமாய்க் கேட்பவர்க்கு ஸத்விஷயங்களைச்சொல்லுவார். தவருது கேட்பவரில் கோமளம் ஒருத்தி என்று சொல்லவேண்டியதில்லை. நம்மைப்படைத்து நமக்கு நித்யஸ்வாமியாய், நம் நித்யநேதாவாய், நம் ரக்ஷணத்தில் நித்யதீக்ஷிதனுய் ஸ்ரீ தேவராஜன் நிற்கும் நிலையைப் படிக்காத மாந்தரும் உணருமாறு அவர் சொல்லும் அழகு யாவர் மநஸ்ஸையுங்கவர்ந்தது. இறைவனை மனமார நேசித்தவர்கள் ஆழ்வார்களின் ஸமூஹம் போல் இந்த உலக சரித்திரத்தில் 'ந பூதோ ந பவிஷ்பதி'. லௌகிக இன்பங்களை அஸாரமாய் வெறுத்து உதறி ஸ்ரீலோகநாதனே ஸர்வமென்று துணிந்த அந்த மஹானுபாவர்கள் தங்களுடைய வாழ்க்கையிலுலேயே இந்த உலகத்தவர்க்கு மாபெருந் தத்துவங்களை விளக்கிக்காட்டினர். இவர்களுடைய காதலுக்கு நிகர் உலகில் இல்லை. இறைவனிடமன்புகொண்டு அவர்கள் அத்யாச்சர்யமாய் அதிமதுரமாய், ஸர்வார்த்தகர்ப்பிதமாய் ஸர்வார்த்தப்ரதமாக இனியகாதைகளை ஸர்வோஜ்ஜீவனார்த்தமாகப் பாடியருளினுர்கள். அவர்களுடைய திருவடித்துகளை சிரஸா வஹித்த நமக்கு யாதொரு குறையுமில்லை. நாமஞ்ச வேண்டியதெதற்குமில்லை'' என்பார். கோமளத்தின் மனஇன்பத்திற்களவில்லை. அவள் மனதில் தன் வாழ்க்கையில் கண்டிராத ஓர் தைவிக அன்பு அரும்புவதை உணர்ந்தாள்.

(தொடரும்)

𑌆𑌦𑌰𑍍𑌶𑌮𑌿𑌵 𑌸𑌮𑍍𑌪𑌤𑍍𑌤𑍇𑌰𑌮𑍃𑌤𑌾𑌬𑍍𑌧𑍇𑌰𑌿𑌵𑌾𑌶𑌯𑌮𑍍 ।
𑌔𑌪𑌵𑌾𑌹𑍍𑌯𑌮𑌸𑍌 𑌮𑌤𑍍𑌕𑌮𑌾𑌰𑍁𑌰𑍁𑌕𑍍𑌷𑌤𑌿 𑌸𑌾𑌮𑍍𑌪𑍍𑌰𑌤𑌮𑍍 ॥ ௪௨ ॥

ஆதர்சமிவ ஸம்பத்தேரம்ருதாப்தேரிவாசயம் ।
ஔபவாஹ்யமஸௌ மத்கமாருருக்ஷதி ஸாம்ப்ரதம் ॥ **42** ॥

(ப - ரை) ஸம்பத்தே: - ஐச்வர்யலக்ஷ்மிக்கு, ஆதர்சமிவ - தனக்குள் விளங்கச்செய்யும் கண்ணுடிபோன்றதும், அம்ருதாப்தே:- பாற்கடலின், ஆசயம் - உள்ளம் போன்றதும், மத்கம் - என்னை எஜமானனாகவுடையதுமான, ஔபவாஹ்யம் - தேவராஜனாகிய என்னுடைய வாஹனமான ஐராவதத்தை, அஸௌ- இவன், ஸாம்ப்ரதம் - இப்பொழுது, ஆருருக்ஷதி - மேலே ஏறப்பார்க்கிருன்.

(தா-ம்) ராஜசின்னமான குடையை யிழந்தேன். நம் தாயார் தன் காதணிகளையிழந்தாள். இப்பொழுது என் ராஜவாஹனமான ஐராவதத்தின் பேரில் ஏற ஆசைப்படுகிருன். 'அஸௌ மத்கம்' என்று சேர்த்து வைப்பது ரஸம் பாற்கடல் கடைந்த பொழுது லக்ஷ்மியோடு கூட அதன் ஸாரமாக வந்த ஐச்வர்யலக்ஷ்மி என்னைராவதம். ஸகல ஐச்வர்யலக்ஷ்மியையும் அதனுடவில் கண்ணுடியில் போல் பார்க்கலாம். அதைப்பார்த்துக்கொண்டேயிருந்தால் போதும். மற்ற லக்ஷ்மிகளை யிழந்ததும் தோன்ருது. தன் ஸ்வாமியாக என்னை அது கொண்டாடிப்பெருமையடைந்திருந்தது. இப்பொழுது அஸுரன் என்மேல் ஏறலாமா என்று துக்கப்பட்டு அதுவும் நானுமிங்கே உம்மிடம் விண்ணப்பம் செய்ய வந்திருக்கிருேம். ஸாம்ப்ரதம் என்பதற்கு யுக்தம் என்றும் பொருள். சுலோகத்தின் கடைசியில் அந்தப்பதம் இருப்பதைத் தனியாக வைத்துக்கொண்டு அதை காகுவாக வைத்து இது யுக்தமென்று உமக்கே ஸஹிக்குமா ? என்று கேழ்வியுமாகும்.

𑌦𑍇𑌵𑌦𑌾𑌨𑌵𑌸𑌿𑌂𑌹𑌾𑌨𑌾𑌂 𑌨𑍃𑌪𑌾𑌣𑌾𑌮𑌿𑌵 𑌕𑌨𑍍𑌯𑌕𑌾𑌃 ।
𑌸𑍍𑌵𑌹𑌸𑍍𑌤𑍍𑌯𑌶𑍍𑌵𑍇𑌤𑌕𑌾𑌹𑍂𑌰𑍍𑌷𑍍𑌵𑌪𑍇𑌤𑍇 𑌵𑌾𑌣𑌿𑌜𑍀𑌵𑌨𑍇 ॥ ௪௩

தேவதாநவஸித்தாநாம் ந்ருபாணாமபி கன்யகா: ।
அபஹ்ருத்ய த்வதேகார்ஹாஸ்த்வரதே பாணிபீடநே ॥ 43

(ப-ரை) தேவதாநவஸித்தாநாம்- தேவர்கள் அஸுரர்கள் ஸித்தர்களுடையவும், ந்ருபாணாமபி- ராஜாக்களுடையவும், கந்யகா:-கன்னிகைகள், த்வதேகார்ஹா:- உம் ஒருவருக்கே தக்கவர்களாய் இருப்பவர்களை, அபஹ்ருத்ய- அபஹரித்துக்கொண்டு வந்து, பாணிபீடநே- கையைப்பிடித்து விவாஹம்செய்வதில், த்வரதே-த்வரைப்பட்டுக்கொண்டிருக்கிறான்.

(தா-ம்) உம் ஒருவருக்கே பார்யையாக யோக்யமான ஆயிரக்கணக்கான கன்னிகைகளை அபஹரித்துத் தன் அரண்மனையில் கொணர்ந்து அவர்களையிப்பொழுது பலாத்காரமாக விவாஹம் செய்ய த்வரைப் படுகிறான். ருக்மிணியை சிசுபாலன் கைபிடித்திழுப்பதாக ஏற்பட்ட அவஸரத்தில் நீர் வந்து ருக்மிணியைக் கைபிடித்துத் தேரிலேற்றிக்கொண்டு எதிரிகளை யடக்கினதுபோல, இப்பொழுது உம்மையே நாதனாக அடையத்தக்க 16000 கன்னிகைகளுக்கும் வந்திருக்குமாபத்திலிருந்தவர்களைக்காக்கவேண்டாமா. அக்கன்னிகைகள் தேவஜாதி, அஸுரஜாதி, ஸித்தஜாதி, மனுஷ்யஜாதி ஆகவிப்படியெல்லா ஜாதியிலிருக்கும் உயர்ந்த ஸ்த்ரீ ரத்னங்களை யபஹரித்துவைக்கிறான். இத்தனைப் பெண்கள் ஸங்கடப்படுவதைப் பார்த்து மனமிரங்கவேணும்: 'பாணிபீடனே' பாணிபீடனமென்று பாணிக்ரஹணம் செய்யும் விவாஹத்திற்குப் பெயர். இவனிவர்களை பலாத்காரமாக விவாஹஞ்செய்வதுண்மையிலே பீடநமேயாகும். நரகன் கைபிடிக்கவவஸரப்படுகிறான் என்பதால் ஒரு க்ஷணங்கூட தாமஸிப்பது உசிதமல்ல என்று விளக்குகிறான்.

ஸ ஹௌளீஷஸ்ணிலஸாநாம் ஸவோய ஐவெ॥ த்திதஃ ।
பாயதெ விப்யாதநவம் பஶவீயவராக்ஷெஃ ॥ ௪௪

ஸ பௌமஸ்த்வந்நிரஸ்தாநாம் ஸமவாய இவோத்திதः ।
பாததே விபுதாநேவம் பலவீர்யபராக்ரமைः ॥ 44

(ப-ரை) த்வந்நிரஸ்தாநாம்- உம்மால் முன்பு சொல்லப்பட்ட மதுகைடபர் முதலிய எல்லாவஸுரர்களுடைய, ஸமவாய இவ-சேர்ந்து கூடிய ஓர் வ்யக்திபோல, உத்திதः- கிளம்பியிருக்கும், ஸ பௌமः- அந்த பூமிபுத்திரனை நரகன், ஏவம்-இப்படி, பலவீர்யபராக்ரமைः- சக்தி சௌர்யம் பராக்ரமங்களால், விபுதான்- தேவர்களே, பாததே- ஹிம்ஸிக்கிருன்.

(தா-ம்)இதற்கு முன்பு உம்மால் கொல்லப்பட்ட எல்லாவஸுரர்களுடைய பலமும் இவனொருவனிடன் சேர்ந்திருக்கிறது. உம்மைத் தவிர யார் எங்களை ரக்ஷிக்கக்கூடும் ஒவ்வொருவனைக் கொல்வதற்கே நீர்தானே வேண்டியிருந்தது. எல்லாரும் சேர்ந்த இவனைக்கொல்ல உம்மல்லால் கதியேது

𑌤𑌦𑍇𑌵𑌮𑌵𑌸𑍀𑌦𑌤𑍍𑌸𑍁 𑌦𑌯𑌾 𑌦𑍇𑌵𑍇𑌷𑍁 𑌬𑌾𑌧𑍍𑌯𑌤𑌾𑌂 ।
𑌅𑌨𑌪𑌹𑍍𑌨𑍁𑌤𑌦𑌾𑌸𑍍𑌯𑌾𑌨𑌾𑌂 𑌦𑍋𑌷𑌨𑌿𑌹𑍍𑌨𑌵𑌸𑌾𑌕𑍍𑌷𑌿𑌣𑍀 ॥ ௪௫

தததேவமவஸீதத்ஸு தயா தேவேஷு பாத்யதாம் ।
அநபஹ்நுததாஸ்யாநாம் தோஷநிஹ்நவஸாக்ஷிணீ ॥ 45

(ப-ரை) தத்- ஆகையால், ஏவம்- இப்படி அவஸீதத்ஸு வருந்தும், தேவேஷு- தேவர்களிடத்தில், அநபஹ்னுததாஸ்யாநாம்- உமக்கு தாஸர்கள் என்பதை அபலபிக்காதவருடைய, தோஷநிஹ்நவஸாக்ஷிணீ- அபராதங்களைக்கவனிப்பதில்லை என்கிற உம் ஸ்வபாவத்திற்கு ஸாக்ஷியான, தயா- உம்தயையானது, பாத்யதாம்- இரங்குவதற்கு,(விழுவதற்கு) இதுதக்கவஸரம், அப்படியேவிழவேணும்(இரங்கவேணும்)

(தா-ம்)உம் தாஸர்கள் தேவர்கள். 'ருத்ராஸ்யம் ஹரேः ஶரீரம்)என்பதை தேவர்கள் எப்பொழுதும் மறைப்பதில்லை. மறப்பதில்லை தங்கள் தாஸ்யத்தை ஒளிக்காமலிருக்கும் தேவர்கள்பேரில் உம் தயை யிரங்கவேணும். 'அவர்களுக்கு

தோஷங்களில்லையோ' என்று கேட்க ந்யாயமில்லை. தோஷங்களை மறைப்பதும் மறப்பதுபோல் செய்வதும் தானே தயை செய்யும் வ்யாபாரம். தோஷமுள்ளவர்கள்விஷயத்தில்தானே தயைக்கு அதிக அவகாசம். எங்கள் தாஸ்யத்தை நாங்கள் மறக்காமலிருப்பதற்குப் பயன் எங்கள் தோஷங்கள் மறைக்கப்படுவதுதானே. எங்கள் தாஸ்யத்தை நாங்கள் மறவாமலிருந்தால் எங்கள் தோஷங்கள் உமக்கு மறந்துபோகும் நீர் ஆச்ரித தோஷங்களை கவனியாமல் மறைத்ததுபோல் பாவிப்பதை உம் தயை ஸாக்ஷாத்தாய்ப் பார்க்கிறாள். அவள் தோஷங்களைப்பார்த்து உம்மை அவற்றை மதியாமல்படி செய்கிறாள். நீர் அந்த தோஷங்களை ஸர்வஜ்ஞராயினும் பார்க்காமல் உமக்கு மறைந்திருக்கிறது போல் செய்கிறாள். 'க்ருபே ஸர்வத்ரஷ்டா ந கணயதி தேஷாமபக்ருதிம்' தோஷங்களின் அபரிகணனத்தை தயை செய்விக்கிறாள் என்று ஸஹஸ்ரநாம பாஷ்யம். [illegible] 'த்வயா பாத்யதாம்' தயை பாதிதமானால் அஸுரன் பாதிதனாவதில் ஐயமில்லை. உம் தயை உதித்தால் போதாதா? எங்கள் கஷ்டநிராசிகீர்ஷைதானே உம் தயை. உம் தயையால் அஸுரநிராகரணம் ஸித்தம் உம் இச்சாமாத்திரம் போதுமே.

[illegible] ॥ ௪௬

தமிமம் பூமிபாரஸ்ய த்வயைவோத்பாதிதம் ப்ரபோ ।
த்ரிலோகீகண்டகம் தீக்ஷ்ணம் த்வமேவோத்தர்த்துமர்ஹஸி ॥

(ப-ரை) ப்ரபோ- ஸ்வாமின், பூமிபாரஸ்ய-பூமிச்சுமையின் பாதிக்குக்குறையாதவனும் த்வயைவோத்பாதிதம்-உம் சக்தி ஸம்பந்தித்தினாலேயே உத்பத்திசெய்யப்பட்டவனுமான, தீக்ஷ்ணம்- கூர்மையான, த்ரிலோகீகண்டகம்- மூவுலகுக்கும் ஹிம்ஸகனான, தம்-அவனை, த்மேவ- நீரே; உத்தர்த்துமர்ஹஸி- கிள்ளிக்களைந்தெரிவதற்கு யோக்யர்.

ஸம்ரக்ஷிணீ அநுபந்தம்.

*ஸ்ரீநிவாஸ வள்ளல்.

"இன்பத்திலிறைஞ்சுதலிலிசையும் பேற்றில்
இகழாத பல்லுறவிலிராகம் மாற்றில்
தன்பற்றில் வினைவிலக்கிற்றகவோக்கத்தில்
தத்துவத்தையுணர்த்துதலில் தன்மையாக்கில்
அன்பர்க்கே யவதரிக்குமாயனிறக
அருமறைகள் தமிழ் செய்தான் தாளே கொண்டு
துன்பற்ற மதுரகவி தோன்றக்காட்டும்
தொல்வழியே நல்வழிகள் துணிவார்கட்கே."

(தேசிகமாலை· அதிகார ஸங்கிரகம் 2.)

உலகம் என்பது உயர்ந்தோர் மேற்றே. கருவிலே திருவுடையவரே உயர்ந்தே பிறந்தாராவார். இவரே புகழொடு தோன்றுபவர். திருமகளோடு வருந்திருமாலே பரன் என்றுணர்ந்து அவன்பாதாம்புயத்தைப் பற்றுவதே பயன் எனத் தெளிந்து, உள்ளம், உரை, செயல், என்ற திரிகரண சுத்தியோடு ஸர்வ சரீரியான திருமகளார் தனிக்கேள்வனை ஒழிவில் காலமெல்லாம் அநுபவிப்பதையே பொழுது போக்காகக் கொண்டு, மெய்யடியார்கள் தம் கூட்டத்துடனிருந்து உலகின் புறச்செய்யும் பெருந்தகையாளரையே பெரியார் எனத் தமிழ் கூறு நல்லுலகு தொன்று தொட்டுப் பாராட்டி வருகின்றது. அன்பின் வழியது உயிர்நிலை எனவறிந்து பெறுவதெல்லாமிங்கே நாம்பெற்று; வாழப்பாரிப்பவரையே அன்பரென உலகப்போற்றும். தமக்கென வாழாப்பிறர்க்குரியாளரே இவர் அன்பர்க்கே மாயன் அவதரிக்கிறான் என்று அன்பர்குலச் சிங்கனை தூப்புல் வேங்கடநாதன் முழக்கிய சிங்கநாதம். "அன்

---

*இது பெருமாள்கோவில் ஸ்ரீரங்கராஜ வீதியிலுள்ள சாணுகதி நிலயத்தில் நடைபெற்ற மஹாமஹோபாத்தியாய திருப்புட்குழி ஸ்ரீ உ. வே. கிருஷ்ணஸ்வாமி தாதாசாரியர் ஸ்வாமியின் இரண்டாவது அறுபதாண்டு நிறைவு விழாக் கொண்டாட்டத்தில் 24-10-43உ வித்வத் ஸதஸ்ஸில் திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கக் காரியதரிசி ப. ரெ. திருமலை அய்யங்காரால் வாசிக்கப்பெற்றது.

பன் தன்னை அடைந்தவர்கட்கெல்லாம் அன்பன் தென்குருகூர் நம்பிக்கு அன்பனுய் மதுரகவி தோன்றக்காட்டுந் தொல்வழியே நல்வழிகள்'' என நானிலத்தில் நன்கு காட்டி அவனியை வாழ்வித்த தூப்புல் வள்ளலாரின் திருவடிகளை வாழ்த்தும் அன்பரிற்றலைவராய்த்திகழ்ந்து விளங்குபவரே ஸ்ரீமான் வண்பாக்கம் வேங்கட ஸ்ரீநிவாஸய்யங்கார் எனப் பெயரிய உத்தமர் இவரது வண்மையைச் சற்று விளக்குவதே இக்கட்டுரையின் முக்கிய நோக்கு.

தமிழுக்குக்கதியாவார் இருவர் என்ப. கலைகான் கற்றோரிதயங்களிக்கக் கவிபாடும் கம்பநாட்டாழ்வானையும் திலைகான் தூப்புல் வள்ளலான திருவேங்கடமுடையானையும் குறிக்குமெனக்கொள்க. இதன்விவரணத்தை தோத்திரமாலை (திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்க வெளியீடு 7.) முகவுரையிற்காண்க. உத்தமக் கவிகளான இவ்விருவரையும் முறையுடன் போற்றுவதே இத்தமிழ்ச்சங்கத்தின் முழுநோக்கு. இராமாவதாரம் அரங்கேற்றிய பங்குனி உத்திரமான பகற் போதில் ஆண்டுதோறும் கம்பர் திருநாட்கொண்டாட்டம் இச்சங்கத்தாரால் நடத்தப் பெற்று வருவதில் இதனை ஆதியில் ஆரம்பிவித்து அவைத்தலைமை தாங்கி இனிது நிறைவேறுமாறு செய்த பேருபகாரம் ஸ்ரீநிவாஸ வள்ளலாருடையதே. நல்லார் செய்யுங் கேண்மை நாடோறும் நன்றாகும் என்றமுது மொழியின்படி அந்நன்னுளிற்றொடங்கியது. விதைபோல வளர்ந்தோங்கி வருவது குறிப்பிடத்தக்கது. இவ்வன்பர் சிகாமணி அன்று முற்றுறையில் 'இன்று தமிழ் தமிழாயது' என்ற ஸூக்திரூபமான மங்கள வாக்கியம் என்றும் அன்பர்கள் செவிக்குணவாகயிருந்து வருகின்றது. அன்றைத் தொடக்கமே இச்சங்கத்தின் அபிவிருத்திக்கு வித்து என்பது எம்மனோர் அநுபவம்.

இத்திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கத் தலைவரும், முத்தமிழ்த்துறையின் முறைபோகிய உத்தமக்கவியாய் விளங்குபவரும், திருப்பாடியம் முதலான ஸ்ரீவைஷ்ணவ ஸம்பிரதாய க்ரந்தங்களை நல்லோரிடம் முறைப்படி காலக்ஷேபம் செய்து அவ்விரதத்தை வழங்கிவரும் நல்லன்பரும், இச்சங்க வெளியீடான வதனமாலைப் பத்திராசிரியருமான ஸ்ரீமான் ஆர். கேசவ அய்யங்காரவர்கள் எம். ஏ. பி எல்., அட்வகேட் பாடிய "வேதாந்த தேசிக ஊசல்'' (சங்க வெளியீடு 6) பிரமாதி வருடம் வைகாசித்திருவிழாவில் கருடசேவையன்று முத்திதருநகரேழில் முக்

கியமாங் கச்சிக்குத் திலகமாய் விளங்கும் அம்பூந்தேனிளஞ் சோலையில் அமர்ந்துள்ள தூப்புல் வள்ளலார் திருவடி வாரத்தில் காணிக்கையாக மேற்கண்ட சுபதினத்தில் தூப்புல் கோமானுக்கு பேரருளாளப் பெருமான் அளித்த மரியாதைகளுடன் வீற்றிருந்த போழ்து இடப்பெற்றது. அன்றுமாலை 4 மணிக்கு சின்ன காஞ்சீபுரம் ஸ்ரீரங்க ராஜவீதியில் அமைக்கப்பெற்றுள்ள ஸ்ரீதேசிகதர்சனசர்ாமத்தில் ஒரு பேரவை கூட்டி "வேதாந்த தேசிக நசல் விளக்கம்" என்ற மகுடமிட்ட விஷயத்தைச் சங்கத்தலைவர் அன்றும் அதனையடுத்து மூன்று நாட்களிலும் பலதிவ்ய தேசங்களிலிருந்து வந்திருந்த ஸ்ரீ வைஷ்ணவர்கள் இன்புறுமாறு உபந்யாஸஞ் செய்யும்படி செய்வித்து தான் உடனிருந்து மணிவிளக்காய்த் திகழ்ந்து அன்னவரை உலகு நன்கறிந்து வைக்கும்படி செய்த உத்தமவுபகாரத்தை யாவரே மறக்க வல்லார்? அன்றுதொட்டு வைணவவுலகமுற்றும் அவ்வப்போது அழைத்து அன்பரின் அமுதமொழிகளை அருந்திவருவது அனைவரும் அறிந்ததொன்றே. ஈதொன்றும் நம் வண்பாக்கம் வள்ளலின் கைவளத்தை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் காட்டவல்லது. இதுபோல் பல சந்தர்ப்பங்களை எடுத்து இயம்பலாம். விரிவஞ்சி இதனை மட்டும் உணர்த்தனம்.

தூப்புற் குலமணி அருளிச் செய்துள்ள "தயாசதகம்" எனும் வடமொழித் தோத்திரத்தை "திருவருண்மாலை" என்ற செய்ய தமிழ் மாலையாக இச்சங்கத்தலைவர் ஆக்கியிருந்ததை அறிந்த சிரோங்கு வள்ளலாரான ஸ்ரீ தேசிக தர்சந ரத்ந தீபம் ஸ்ரீமான் வி. வி. ஸ்ரீநிவாசய்யங்கார் அவர்கள் அம்மாலைத் திருவரங்கேற்றுவிழாவைத் திருமயிலைத் திருவேங்கடமுடையான் ஸந்நிதியிலுந் திவ்ய தம்பதிகள் திருவுள்ள முகக்குமாறு நடத்திவைத்த ஔதார்யம் ஓதியோதியுணருந்தொறு முணர்ச்சியுதவும் என்றே அய்யங்காரவர்களின் கொடைத்திறன்! அன்று அம்மயிலையில் இச்சங்கத்தலைவர், மஹாவித்துவான், காரியதரிசி முதலியோரை அன்புடன் ஆதரித்த அழகு அழியா வழகே.

மக்களாய்ப் பிறக்கின் புகழிற்குக் காரணமாகிய குணத்தோடு பிறக்கக்கடவர். புகழுண்டாக வாழ்வதற்குக் கல்வி, ஆண்மை, நற்குடிப்பிறப்பு, நல்லொழுக்கம், செல்வம் தீவினைக்கஞ்சுதல், நடுநிலைமை, ஈகை முதலிய பல காரணங்

கள் உள. இவை ஒருங்கே நிரம்பப் பெற்றதே நம் ஸ்ரீநிவாஸ வள்ளலில். எவ்வுயிர்க்குஞ் செந்தண்மை பூண்டொழுகும் அந்தணர்குலத்துதித்தவர். ஒழுக்கமுடைமை, குடிமை என்றபடி இவரது சீரிய ஒழுக்கமே இவரை அந்தணச்சிரேட்டர் என அனைவரும் கொண்டாடுதற்குரித்தாக்குகிறது. உலகத்தோ டொட்ட ஒழுகலே இவர் கற்ற கல்வி. திருமாலடியார் பரம் பரையிற்றோன்றி உலகெங்கும் புகழ் விரிக்கும் நற்குலத் துக்கோர் விளக்காய் நின்று பரோபகாரமே ஒருருவெடுத்த தெனப்பேரறிஞர் போற்றத்திகழ்ந்து தேசிகபக்தியெனும் திண்மை பெற்று அருளுடைமை நலனுமாறு தண்ணளி மிகுந்து மிளிரும் நல்லற மூர்த்தியே இப் பெருந்தகை யாளர் என்பது உற்றதுரைப்பதேயாகும். சரணகதி தர்ம நுட்பத்தைச் சாலவிளக்கிய தூப்புற்குலமணியின் பாதார விந்தங்களைத் தனது இதய கமலத்தில் இனிதிருத்தி அருச் சனை புரிந்துவரும் அண்ணலே இவர் என்பதோர் பேருண்மை. இவரது பூசனை மிகவும் புனிதமானது விலக்ஷணமானது, தேசிகனுக்கு மிகவும் உவப்பைத்தருவது. ஆசார்ய மஹோத் ஸவம் என்பது அவரவர்கள் அருளிச்செய்த கிரந்தங்களைத் தக்கபடி போற்றி, அவற்றை அறிஞரும் அறிவிலிகளும் கொண்டாடுமாறு செய்து, அவ்வவதார புருஷர்களின் உய ரிய நோக்கங்களை உலகறியப் பரவச்செய்து, அனைவரும் இன்புற்று வாழச்செய்வதே என்ற செவ்விதான மார்க்கத் தைக் கண்டவரே இவ்வையங்கார். அதனை அநுட்டான முறையில் நடத்திக்காட்டி பின்புள்ளாரும் பின்பற்றிஒழுகும் வண்ணம் சீரியதோர் மாண்பில் சிறப்புறச் செய்து சீர்மை யுடன் திகழ்கின்றார் இத்தீர்த்தர். அனைத்துலகும் அதிசயிக் குமாறு தூப்புலில் அன்புடன் நடத்திய ஸ்ரீராமாநுஜ தயா பாத்ர மஹோத்ஸவம், ஸ்ரீபாதுகாஸஹஸ்ர மஹோத்ஸவம், செந்தமிழ்த் தலைவரான பேயாழ்வார் திருவவதாரத்திருப்பதி யான திருமயிலையில் நடத்திய தயாசதக மஹோத்ஸவம் தஞ் சாவூர், மதுரை முதலிய இடங்களில் நடிப்பித்து நடத்தி வைத்த ஸ்ரீஸங்கற்ப ஸூரிபோதய மஹோத்ஸவம் முதலி யன இதற்குத் தக்க சான்று பகரும்.

பிறர் கண் காணும் நல்லனவற்றைக்கண்டு அவற்றை உலகறியுமாறு பறை சாற்றும் வெற்றி இவருடையதே என்னலாம். இதன் மெய்ம்மையை இராமாவதார ப்ரசங்கி

யாகிய வஸிஷ்டபாரதியார் பல்லாண்டுகட்கு முன்னே இந்து நேசன் வாயிலாக எழுதி வந்த ஜீவ்யசரித்திரத்தில் விசத மாகப் போற்றியுள்ளார். ஆங்கிலக் கல்வியால் ஸநாதநதர்ம நெறியினை அவமதித்திருந்த பல்லாயிரவர்கட்கு நல்லறிவுச் சுடர்கொளுத்தி நற்றொண்டாற்றி வந்த ஸ்ரீ யு. பி. கிருஷ்ண மாச்சாரியர் அங்ஙனம் நன்மை புரியுமாறு அவ்வப்போது அவருக்கு பல்வேறு உதவியளித்து ஊக்கியவர் இவ்வுத்தம சிலரே. திருவயிந்திரபுரம் பண்டிதபூஷணம் மஹாமஹோபாத்தியாய சேட்லூர் நரஸிம்மாசாரிய ஸ்வாமியை அனைவரும் போற்றும் பெற்றியுடன் திகழஅடிக்கோலி உடனிருந்து அநுபவித்து பிறரும் அவ்வநுபவத்தில் அழுந்துமாறு உதவிய பெருநல்லுதவிக்கு இவ்வையகம் என்ன கைம்மாறியற்ற முடியும்? ஒப்பிலியப்பன் ஸ்ரீராமதேசிகாசாரியரைத் தேசிகத்தொண்டில் ஆழங்காற்படுமாறு செய்த அண்ணல் யார்? இதுகாறும் வெளிவராத ரீதியில் மனத்தைக் கவரும் வண்ணம் "தேசிகப்பிரபந்தம்" பதிப்பிக்குமாறு செய்து அதற்கு அணியாய் விளங்கும் சூத்திரவடிவமான முகவுரையை உதவிய நம் ஸ்ரீநிவாஸ வள்ளலின் வண்மையே வண்மை. அம்முகவுரை அடிக்கடி படித்துப்படித்து அநுபவித்தாலும் ஆராத வமுதக்கடலாய் அமைந்துள்ளது. அப்பிரபந்தத்துக்கு விசேட பொலிவைத் தருவது அதில் விளங்கும் நம் வேதாந்தவாரியனின் திருவுருவப்படம். ஸ்ரீவைஷ்ணவ உலகிற்கு அழகினுக்கழகு செய்யும் இம்மூர்த்தியைத் தந்தருளிய தேசிக பக்தசிகாமணிக்கன்றோ ஸ்ரீபராங்குச பரகால மடாதிபதிகள் போரவுகந்தளித்த பட்டமும் பதக்கமும் ஏற்கத்தகும். ஸ்ரீ தேசிகதர்சனரத்நதீபப்ரகாசம் மிளிரும்பெற்றியே பெற்றி. கம்பர் படத்தையும் கல்வியாளர் திகைக்கும்வண்ணம் ஆக்கியுள்ளார். நான்முகனினும் சீரியரிவரெனின் பொய்யாகுமா? இவர் படைப்பு அழியாததொன்றல்லவா? ஸ்ரீஅஹோபிலமடம் திவ்யாஸ்தானத்தில் தற்போது எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ அழகியசிங்கரால் நிறுவப்பெற்றுள்ள ஸ்ரீமதுராந்தகம் ஸம்ஸ்க்ருத கல்லூரி மண்டபத்தை அழகுறச்செய்து விளங்குவது இவ்வள்ளலார் நாட்டிய கோஷ்டீபுரம் ஸ்ரீ ஸௌம்யநாராயணாசார் ஸ்வாமி, வங்கீபுரம் எஸ். வாஸுதேவாசாரியர் இவர்களின் உன்னதமான உருவப்படங்களல்லவா? அத்திறப்பு

விழாவன்று உன்னதபதவி தாங்கி நிற்குஞ் சீரியருந்திகைத்து ஆச்சர்யமுற்று ஆனந்திக்குமாறு செய்த ஓர் அற்புதம் அன்று அங்கு உடனிருந்த அடியேன் முதலானோர் அநுபவஸித்தம்.

பல்லாண்டுகளாக ஸம்ப்ரதாயாபிவ்ருத்தியை முன்னிட்டு நடைபெற்று வந்த வேதாந்ததீபிகையின் பத்திராதிபராக இந்த மஹான் இருந்தபொழுது அதன்மூலம் புரிந்து வந்த தேசிகத்தொண்டு மிகவும் போற்றுதற்குரியது. ஆற்றல் மிகுந்த எழுத்தாளர்களைக் கண்டுபிடித்து அவர்களுக்குள் மறைந்து கிடந்த அபாரசக்தியை உலகிற்குக்காட்டி அவர்களை மேன்மேலும் உத்ஸாஹப்படுத்தி நற்பெருண்டாற்றச்செய்த தனிப்பெருந்தகைமையும் இத்தனிச் செல்வருடையதே. சிறந்த கட்டுறையின் ஆரம்பத்தில் இவரது ஒப்புயர்வற்ற மதிப்புரை விளங்க பிரசுரித்து வந்த பான்மை வியாஸம் எழுதியுதவியவர்கட்கும் படிப்பவர்கட்கும் ஆனந்தத்தையளித்தது. 'திருவள்ளுவரும் ஸ்ரீவைஷ்ணவமும்' என்ற கட்டுரையைச் சிலாகித்து அய்யங்காரவர்கள் அனுப்பிய கடிதம் மேன்மேலும் அடியேனை ஆராய்ச்சித் துறையில் புகுத்தி நன்மணிகளைக் கண்டெடுக்கப்பேருதவி புரிந்தது. தனது அபிப்பிராயத்தை உள்ளபடி உரைக்கும் உத்தமரே இப்பேரறிஞர். குறைகளைக்கண்டால் ஸமயோசிதமாக எடுத்துக்காட்டி அவற்றை அகற்றும் அழகு ஒரு தனியழகு. அவ்வப்போது அவர் அளிக்கும் சிறந்த போதனைகள் மேன்மேல் ஞானாபிவிருத்தியை நல்கும். அந்தப் பத்திரிகை நடாத்துங்காலை, ஸ்ரீ வேதாந்ததேசிக மலர், 'ஸ்ரீபாஷ்யகாரர் மலர்' என்ற இரண்டு அழகிய மாலைகள் அவர்களின் திருநக்ஷத்திரங்களில் வெளியிடச்செய்தது வேறெவரும் அதுகாறும் காணாத அதிசயம். அம்மலர்கள் முழுமையும் அவ்வாசார்யர்களைப்பற்றி அநேக வித்வான்கள் அற்புதமாக வரைந்த வியாஸங்கள் விளங்கின. திருவயிந்தை நகர் அமர்ந்துள்ள ஸ்ரீவேதாந்ததேசிகனும் ஸ்ரீ பெரும்பூதூரிற்றுலங்கும் ஸ்ரீ பாஷ்யகாரரும் அவற்றை அலங்கரித்து அன்பர்கள் அகங்குளிரச் செய்தனர். இம்மலர்கள் தீபிகையின் தனிச்சிறப்பே. திருப்புட்குழி ஸ்வாமி வைபவமும் பரக்கவெளிவந்தது இக்காலத்திற்றான். இங்குகூற வேண்டுவது ஒன்றுண்டு. 'கம்பர் மதம் வைஷ்ணவம்' என்ற

கட்டுரை நயத்தை அநுபவித்ததை அடியேனுக்குணர்த்தி ஆசீர்வதிக்க அடியேன் குடிசைக்கு எழுந்தருளி அப்பொழுது யான் அங்கில்லாததால் சற்றே அங்கு வந்தபின் அருளிய அமுதவாசகம் அருமருந்தே. என்னே இம்மஹானின் ஸௌலப்ய ஸௌசீல்ய வாத்ஸல்யாதிகள்! நிறைகுடம் நீர்தளும்பல் 'இல்' என்பது முதுமொழியன்றே ?

ஸ்ரீரோங்கு வள்ளலாரான வண்பாக்கம் ஸ்ரீநிவாஸய்யங்கார் அநந்தகல்யாண குணகணநிலயம். இவர் இருக்குமிடமே நன்னிலம். பெருமாள்கோவில் திருவஹீந்திரபுரம் முதலிய திவ்ய தேசங்களில் நடைபெறும் உத்ஸவங்கள் மஹோத்ஸவங்களாக சிறப்புறுவது இந்த ஸ்வாமி எழுந்தருளுங் காலங்களிற்றான் என்பதை அனைவரும் நன்கு அறிவர். 'அத்திகிரி அத்திகிரியே' என்ற தேசிகமாலைப் பாசுரவியாக்யானம் வைசாக உத்ஸவாதிகளில் அத்திகிரி 'ஹஸ்திகிரி'யைச் சார்பவர்களுக்கு வெள்ளிடைவிலங்கல். வைதிகர்களை கௌரவித்து அவர்களது ஒழுக்கம் குன்றாது நிலைத்தோங்கப்புரியும் உதவி இணையற்றது. 'அம்பரமே தண்ணீரே சோறே அறஞ்செய்யும் எம்பெருமானே' இவர் என அன்னவர் கொண்டாடுவது மிகவும் பொருத்தமுடையதே. அறவோர்க்கு ஸாரூப்யத்தை நல்கும் அந்தணரோவென அறிஞர் ஐயுறுகின்றனர். 'தருகை நீண்ட தயரதன்' எனக்குறித்தான் கம்பன். இவ்வண்ணலுந்தயரதனே என்பேன். இவரது குடும்பமே ஸ்ரீரோங்கு செல்வநிலையம். 'மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன் நன்கலன் நன்மக்கட்பேறு' என்ற மாதாநுபங்கியின் பொது மறைக்கு இலக்காய் இலங்கும் இல்லமே இவரது. எல்லார் ஒருங்கே அமையப் பெறுதல் ஆண்டவன் திருவருட்செல்வப்பொலிவை விளக்குமல்லவா ? விருந்தோம்பல், பந்துபரிபாலனம், இனிய வை கூறல் என்பன இம்மஹானுடன் கூடப்பழகிக் கற்க வேண்டியவை. எங்கு இருந்தாலும் அன்பரிட்டம் இவரை அகலாது. இவரது திருமேனி சோபையும், அன்று அலர்ந்த செந்தாமரையினை வெல்லுந்திருமுகமண்டலமும், அருள்நோக்குடனே ததும்பும் திருக்கண்களும், அன்பை வெளிக்காட்டும் புன்சிரிப்பும் தருகையைத் தவிர வேறொன்றறியாத் திருக்கைகளும், நெற்றியின் அழகைச் சிறப்பிக்கும் திருமண்காப்

யும், உலகமடங்கலும் அன்பர் குலம் எனக்கருதும் திருவுள்ள மும். மாசற்ற பஞ்சகச்சத்துடன் கூடித் துலங்கும் ஆடையும், செவிக்கணியாய் செவிச்செல்வத்தை வளர்க்கும் வைரக்கடுக்கன்களும், கைவிரல்களை அலங்கரிக்கும் மோதிரங்களும் இவரை எழில் அழகர் என்றே நிரூபிக்கும். இவரது ஸம்பாஷணை அநுபவிக்க அநுபவிக்க தெவிட்டாத தெள்ளமுதமே. பேசுவது போல் எழுதி எழுதியவா வாசகர் முன் நிற்பது போல் காட்டும். தனி ஆற்றல் இவருக்கு உண்டு. இவர் எழுதியுள்ள 'கீதோதயம்' இதற்குத்தக்கத்தனிச்சான்று. சரணம் புகுந்தோரைக்காத்தலே அறத்திறன். இதனை இவர்பால் பூரணமாகக் காண்கலாம். தெய்வபலத்தையே பலம் எனக்கருதும் இவ்வாரியர் தன்னை நலன் நாடி வருபவர்கட்காக நிஷ்டை கூடி அவர்கட்கு நலனைப் பெருக்குதல் மிகவும் போற்றத்தகுந்தது. இவ்வுண்மையை அவர்களில் சிலர் தாமாகவே அடியேனிடம் பன்முறை கூறியிருக்கின்றனர். தர்ம ரக்ஷணத்தில் இவரது ஆர்வம் அளவு கடந்தது. ஹிந்துமடமசோதா நடமாடிய காலத்தில் இவரது வீரத்தன்மையை உலகு நன்கு அறிந்து கொண்டாடிற்று. அதர்மம் தலையெடுக்கத் தொடங்கும் பொழுதெல்லாம் இவரது வீரகர்ஜனை அதனை அறவே அழித்ததற்குப் பேருதவி யளித்தது. இவரது ஆசார்யபக்தியை யாரே அறியவல்லார்? குருபரம்பரைக்கு ஒரு மஹோற்சவம் என்பது இன்று இவர் கண்டு காட்டியதே யன்றி இதுகாறும் வேறெவருங்காணாததே. சென்ற வைசாக மஹோத்ஸவத்தில் 'பட்டர் திருநாட்கொண்டாட்டம்' என்றஒப்பற்ற உத்ஸவத்தை நடத்தியஅழகுக்கு எதனை உவமிக்கலாம்? பேரருளாளன் இவரது ஆவியுள் கலந்து இவ்வாறு ஆக்குகின்றான் என்றே தெளியவேண்டும். இவரது ஔதார்யம் பன்னியுரைப்பின் மிகப்பெரியதோர் புராண ரத்னமாகும். உலகம் நன்கு வாழவேண்டுமென்பது இவரது பேரவா. பகவானைத்தனக்கு நாயகனாகவே கருதி உத்தமநாயகியாகத் தன்னை பாவித்து அவனது உகப்புக்காகவே தன்னை அலங்கரித்துக்கொண்டு அவன் திருமுன்னர்ச்சேர்ந்து நிற்பது ஒரு பெருந்தத்துவ விளக்கமாகலின் நல்லாரனைவரும் அந்நன்முறையை அநுஸரிப்பது நலமே. இதுகாறும் கூறியவாற்றால் இவர் உத்தமமான சரணாகதிநிஷ்டர் எனத்தட்டில்லை. இவரே

அன்பருக்கன்பர், இவரே வள்ளர்களிற்றலைவர். இவரே உத்தமோத்தமர். இவரே ஸ்ரீவைஷ்ணவர். இவரே குணக்குன்று. இவரே அடியார்க்கு நல்லார். இவரே நல்லறமூர்த்தி.

இச்சங்கத்தின் அபிவ்ருத்தியிலேயே பூரணநோக்குடைய ஸ்ரீநிவாஸவள்ளல் எல்லாம் வல்ல இறைவனது திருவருள் பெற்று இன்பமிகுந்து அரோக திடகாத்திரராய் எழுந்தருளியிருந்து இன்றுபோல் அன்பரை ஆதரித்து வருவாராக. அவரது உற்றுரும் உறவினரும் எம்பெருமான் அநுக்ரஹம் பெற்று மேன்மேலும் சிறப்புறுவாராக. அன்னவரது சதாபிஷேக மஹோத்ஸவத்தையும் இச்சங்கத்தார் தக்க முறையிற் கொண்டாடி இன்புறுவாராக.

பொங்கும் மங்கலம் எங்கும் தங்குக.

ப. ரெ. திருமலை அய்யங்கார்
காரியதர்சி
திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்கம்

புஸ்தக விமர்சம்.

"திருக்கண்ணமங்கைத்தல வரலாறு" என்னும் புஸ்தகம் வரப்பெற்றோம். இதை ஆக்கிய பாக்கியவானுகிய பண்டிட் T. S. மாதவாச்சாரிய சிரோமணியின் வாக்யங்கள் ச்லாக்யங்களே. கோவிலின் படவிளக்கம், பொருளடக்கம், முன்னுரையும் பின்புள்ள பொன்னுரைகளும் போற்றத்தக்கவை. இதைப் பதிப்பித்த ஷை தேவஸ்தானத்தின் எக்ஸிக்யூடிவ் ஆபீஸர் போல மற்றும் திவ்யப்ரதேசங்களின் பெருமைகளை அங்குள்ள ஷை ஆபீஸர்கள் அச்சிட்டு வெளியிடுபவரேல் மிக்கப்பொருத்தமாகும்.

ஸம்—கர்.

முக்கிய அறிவிப்பு:—

வருஷம் முடிந்த பின்னும் சந்தா அனுப்பாதவருக்கு வரும் வருஷம் முதல் ஸஞ்சிகை வரமாட்டாது. ஸ—ர்.